விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 303 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 31 வியாழக்கிழமை (17.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




13வது திருத்தம் அதிகாரப் பகிர்வு

# தமிழ் மக்களுக்கு அவசியமில்லை

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் அவசியம் இல்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மழையால் யாழில் 4 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

மழை அனர்த்தத்தால் யாழில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 11 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு வீடுகளும் பகுதியள

15

## ஐரோப்பாவில் யாழ்.இளைஞன் சடலமாக மீட்பு



(கொழும்பு)

ஐரோப்பா எல்லைப்பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்

15

## வரி செலுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

நாட்டில் பாரியளவில் வரி செலுத்தாமல் இருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தி

15

## பதின்மூன்று நாட்களில் ரூ.419 பில்லியன் கடன்

### அநுர அரசாங்கம் மீது குற்றச்சாட்டு



(கொழும்பு)

அநுர அரசாங்கம் கடந்த 02 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான 13 நாட்களில் 419 பில்லியன் ரூபாய் திறைசேரிப் பத்திரம் மற்றும் பிணைமுறி கடன்களை பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின்

15

## சீரற்ற காலநிலை

## 13 மாவட்டங்களில் 137, 792 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களில் 1,37,792 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

15

## விவசாயத்தை ஒழுங்கமைக்க நீண்டகாலச் செயற்றிட்டம் தேவை

### ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க



(கொழும்பு)

முறையற்று இருக்கும் இலங்கையின் விவசாயத் தொழிலை ஒழுங்கமைக்கப்பட்ட நிலைக்குக் கொண்டுவருவதற்கு நீண்டகால ஒருங்கிணைந்த தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்

15

## தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்



02

## வட மாகாணத்தில் மழை தொடர வாய்ப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் இன்றும் மழையுடனான வானிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, வட மாகாணத்தின் சில இடங்களில் 50 மில்லி மீற்றரிலும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என அந்தத் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், இடியுடன் கூடிய மழை

15

## மன்னாரில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் மன்னார் பேசாலையைச் சேர்ந்த துரைசாமி கணபதி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பி சிறீதரன் தொடர்பாக பொய்யான செய்தி பரப்பியவர்களின் முகநூல், ரிக்ரொக் பக்கங்கள் முடக்கம்

(கிளிநொச்சி)

முன்னாள் எம்.பி சிறீதரன் தொடர்பாக பொய்யான செய்திகளைப் பரப்பிய முகநூல் மற்றும் ரிக்ரொக் பக்கங்கள் முடக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தொடர்பாக முகநூல்த் தளத்தில் பொய்யாகப் பதிவிடப்பட்டிருந்த செய்திகள் தொடர்பாக, முகநூல் நிறுவனத்தின் உண்மையை ஆராயும் குழுவிற்கு (Fact Checkers), சிறீதரன் அவர்கள் முறைப்பாடு செய்திருந்தார்.

முகநூல் நிறுவனத்தின் உண்மையை ஆராய்ந்தறியும் குழு முறைப்பாடு செய்யப்பட்ட 5 முகநூல் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த செய்திகளின் உண்மைத்தன்மையை விசாரித்து, குறித்த முகநூல் பக்கங்களின் ஊடாக சிறீதரன் தொடர்பாக பதிவிட்டிருந்த தகவல்கள் ஆதாரமற்ற பொய்த்தகவல்கள் என உறுதிப்படுத்தி அறிக்கை ஒன்றை தமது உத்தியோகபூர்வ இணையத்தில் வெளியிட்டுள்ளது.

குறித்த செய்திகள் பிழையான பொய்ச்செய்திகள் என்று முகநூல் நிறுவனம் உறுதி செய்த பின் குறித்த முகநூல் பதிவுகளை தடை செய்து குறித்த செய்திகளின் மேல் "False Information" என வெளிப்படுத்தி அறிவித்திருக்கிறார்கள்.

மேற்குறித்த முகநூல் பக்கங்களை உருவாக்கி உறுதிப்படுத்த பொது நிறுவனங்களின் தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக யாழின் பிரபல விருந்தினர் விடுதி ஒன்றின் இலக்கமும், கத்தோலிக்க தேவாலய நூலகம் ஒன்றின் இலக்கமும் பயன்படுத்தியிருப்பது விசாரணையில் தெரியவந்திருக்கிறது. அத்தோடு குறித்த பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிகளும் பொய்யானவை என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதே போல் சிறீதரன் தொடர்பாக ரிக்ரொக் தளத்தில் பரப்பப்பட்ட பொய்ச் செய்தி வீடியோக்களுக்கு எதிராக ரிக்ரொக் நிறுவனத்திடம் முறைப்பாடு ஒன்றும் முன்வைக்கப்பட்டிருந்தது. குறித்த பொய்ச் செய்திகளை பரப்பிய வீடியோக்களை ரிக்ரொக் நிறுவனமும் தடைசெய்துள்ளது.

குறித்த பொய்ச் செய்தி பரப்பியவர்கள் என சந்தேகிக்கும் மூன்று நபர்களுக்கு எதிராக இலங்கை பொலிஸின் Cyber Crime தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றும் சிறீதரன் அவர்களால் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# நைஜீரியாவில் பெற்றோல் லொறி வெடித்து சிதறியதில் 140 பேர் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் பெற்றோல் டாங்கர் லொறி கவிழ்ந்து வெடித்து சிதறிய விபத்தில் 140 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

நைஜீரியாவின் ஜிகாவா பகுதியில் பெற்றோல் ஏற்றிச்சென்ற டாங்கர் லொறி நெடுஞ்சாலையில் செல்லும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து திடீரென கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தால் டாங்கர் லொறியில் இருந்த பெற்றோல் கசிந்து வெளியேறியது. அருகிலிருந்த மக்கள் டாங்கரில் கசிந்த பெற்றோலை சேகரிக்க விரைந்தனர்.

அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடிய நிலையில், டாங்கர் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 140 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## தையிட்டி...

யாழ். தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், குறித்த போராட்டமானது நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகி நேற்று வரை நடைபெற்றது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த போராட்டமானது, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழ்...

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. மொழி ரீதியான பிரச்சினை அங்கு உள்ளது. அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தாம் விரும்பும் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளது. கொழும்பை மையப்படுத்திய சில வசதி, வாய்ப்புகள் வடக்கிற்குச் செல்வதில்லை.

யாழ்ப்பாணத்தில் ஓரளவு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா அல்லது முல்லைத்தீவில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கையையே வாழ்கின்றனர். இங்குள்ளவர்கள் கல்வி முதல் அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இந்த மக்கள் மிகவும் வறுமைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். தெற்கில் இருந்து வடக்கிற்கு செல்லும் பாதை அழகாக உள்ளது. பாதையின் இருபுறங்களிலும் கடைகள் உள்ளன.

ஆனால், பாதையை தாண்டி உள்ளே சென்றால் வீடுகள் இல்லை, மக்கள் வறுமையாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதும் வாழ்கின்றனர். உட்பாதைகள் மிகவும் மோசமான முறையில் புனரமைக்கப்படாது புழுதிகளுடன் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் சிலர் வெளிநாடுகளில் இருப்பதால் ஓரளவு பொருளாதாரம் உள்ளது. ஆனால், வவுனியா அல்லது கிளிநொச்சி சென்றால் அங்கு பொருளாதாரம் இல்லை. முல்லைத்தீவில் வாழும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழங்களையும், மரக்கறிகளையும் விற்பனை செய்துக்கொள்ள உரிய சந்தை வாய்ப்புக்கள் இல்லை. வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவாகும்.

தெற்கில் இருந்து அங்கு சென்று சுற்றுலாவில் நாம் ஈடுபட்டு வருகிறோம். ஆனால் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முள்ளின் மேல் உள்ளது.

பொது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி தேடுவதே அவசியமாக உள்ளது. காணி முரண்பாடுகள் நீண்டகாலமாக உள்ளன. யுத்தகாலத்தில் தமது காணியை கைவிட்டு வெளியேறிய மக்கள் யுத்தம் நிறைவடைந்து சென்ற போது அந்த காணிகளை வேறு நபர்கள் கைப்பற்றி குடியேறியிருந்தனர். அரசாங்கம் தலையீடு செய்து அந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரச்சினைகள் அவ்வாறு உள்ளன. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காத வடக்கின் தமிழ் அரசியல் தலைவர்கள், தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற வசனங்களைப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஆனால், வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு 13ஆவது திருத்தச்சட்டம் அவசியமில்லை. அவர்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. அவர்களுக்கு விவசாயத்தை மேற்கொள்ள நீர் வசதிகளும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும், கல்வியும், நல்ல வைத்தியசாலைகளுமே அவசியமாக உள்ளன.

எமது நாட்டில் ஒருவர் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அவர் கொழும்புக்கு கட்டாயம் வரவேண்டிய தேவையுள்ளது. கண் பரிசோதனைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரவேண்டியுள்ளது. அனைத்தும் கொழும்பை மையப்படுத்தியுள்ளன. இவ்வாறு கொழும்பை மையப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் செல்லும் போது மக்களின் பிரச்சினைகள் தீரும்.

குறிப்பாக எமது நாட்டில் உற்பத்தி பொருளாதார முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். அந்தப் பொருளாதாரத்தின் பங்காளிகளாக அனைத்து பிரதேச மக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதுடன், அந்த பொருளாதாரத்தின் பிரதிபலன்களும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

உற்பத்திப் பொருளாதாரத்தின் பயன்கள் அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்கும் போது நாட்டில் தற்போது காணப்படும் பிரச்சினைகளில் பெரும்பாலானவைக்கு தீர்வு கிடைத்துவிடும். அதன் ஊடாக அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றார். (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg றவை | - 284/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= |
| 1Kg சம்பா அரிசி | - 228/= |
| 1Kg கீரி சம்பா | - 248/= |
| 1Kg உளுந்தம் பருப்பு | - 800/= |
| 1Kg மல்லி | - 380/= |
| 1Kg சோயா | - 440/= |
| 10Kg விஜிதா குத்தரிசி | - 2530/= |
| 750 ml Vsp நல்லெண்ணை | - 1460/= ~~1550/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3500/= ~~3900/=~~ |
| 180 ml Chik சம்போ | - 420/= ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 52/= ~~80/=~~ |

400g Anchor 1000/=



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(436)

Happy Supermarket 0777 8080 30



## பொதுக் கூட்டம்
## கட்டுடை அரசடி விநாயகர் ஆலயம்

காலம் : 20.10.2024, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : ஆலய மண்டபம்

விடயம்
- தலைமையுரை
- கணக்கறிக்கை
- நன்றியுரை
- செயலாளர் அறிக்கை
- நிர்வாகத் தெரிவு

அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுடை அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை

(C-1410)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலக தேவையை கருத்தில் கொண்டு கல்வித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)

உலகளாவிய தேவைகளை கருத்திற்கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களை அறிவாற்றல் நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும்.

அடுத்த பத்து ஆண்டுகளில் உலகிற்கு தேவையான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வி அதிகாரிகளை சார்ந்துள்ளது. அதற்கான பரந்த நோக்குடன் கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று புதன்கிழமை (16) நடைபெற்ற கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வின் போது கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்களினால் செயற்படுத்தப்படும் ஐந்து திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைக் கல்வி நவீனமயமாக்கல், ஆசிரியர் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மேம்பாடு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தனர்.

இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மிகவும் செயற்றிறனுள்ள பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்பதோடு மாணவர்களுக்கு விருப்பமான சூழலை உருவாக்கி சகல மாணவர்களும் கல்விக்கான பிரவேசத்தை வழங்கும் வகையில் பாடசாலைக் கல்வியை மறுசீரமைப்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் ஆகிய உயர்தர பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ம-7)

# உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து மருத்துவப் பொருட்கள் கொள்வனவு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை ஒப்பந்த முறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள உள்ளூர் மருந்து உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திகளை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும், உள்ளூர் மருந்து நிறுவனத்திற்கும் வழங்கப்பட்ட முன்னுரிமையின் அடிப்படையில் குறித்த மருந்துகளை கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சுடன் உற்பத்தியாளர்கள் மருந்துகளை வழங்குவதற்கான அடுத்தடுத்த ஒப்பந்தங்களைச் செயல்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

விநியோகிக்கப்படும் மருந்துகளின் விலையை தீர்மானிக்க விலை நிர்ணய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மருந்துகளை வாங்கும் முறையின்படி, தற்போது நாட்டின் மருத்துவ விநியோகத் தேவைகளில் சுமார் 20% ஈடுசெய்கிறது. மேலும் அந்தத் தொகை 7% அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, 454 மருத்துவப் பொருட்களை விநியோகிக்கும் திறன் கொண்ட 49 உள்ளூர் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூர் மருந்து உற்பத்தி நிறுவனங்களின் மருந்து உற்பத்தி செயன்முறைக்கு பாதகமின்றி ஒரு வருட காலத்திற்கு அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களில் இருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பிந்தைய கொள்வனவு ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் என்று ஏற்கனவே துணை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# அரசியலில் இருந்து ஓய்வு பெறமாட்டேன்!

## மகிந்த அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயாராக இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் ராஜபக்ஷக்கள் தற்காலிக விலகல் ஒன்றையே மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்கள் தேர்தலில் போட்டியிடவில்லை என்று சமூகக் கருத்து உருவாகியுள்ளது என எழுப்பப்பட்ட கேள்விக்கு ஷசீந்திர ராஜபக்ஷ மொனராகலின் போட்டியிடுகிறார்.

அத்துடன் பொதுஜன பெரமுன கட்சி 113 ஆசனங்களை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்த மகிந்த, தான் ஓய்வு பெறவில்லை எனவும் தற்காலிக ஓய்வு எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி)

# உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்காவிட்டால் வழக்குத்தாக்கல்

## முன்னாள் அமைச்சர்களுக்கு பறந்த எச்சரிக்கை கடிதங்கள்

அனைத்து முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோக பூர்வ இல்லங்களை கையளிக்காவிட்டால் வழக்குப் பதிவு செய்யப்படும் என நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் தொழிலாளர் அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களை உடனடியாக கையளிக்குமாறு முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு பல நினைவூட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும், இதுவரை 11 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மாத்திரமே அவற்றை கையளித்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்களுக்கு, உத்தியோகபூர்வ இல்லங்களை மீள கையளிப்பதில் பெரும் பின்னடைவு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு 07 பகுதியில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 40 ஆகும். அதன்படி இதுவரை கையளிக்கப்படாத உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 29 ஆகும்.

இதேவேளை, அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவது மற்றும் செலவினங்களைக் குறைக்கும் புதிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சகல அம்சங்களையும் மீளாய்வு செய்வதிலும் அரசாங்கம் தனது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (நி)

# அதிகரிக்கும் எயிட்ஸ்

(கொழும்பு)

கடந்த 2023ஆம் ஆண்டு மட்டுமே எயிட்ஸ் தொற்றால் சுமார் 1,327 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு தேசிய எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது, குருநாகல் போதனா வைத்தியசாலையின் விசேட வைத்தியர் சித்ரன் ஹத்துருசிங்க இதை குறிப்பிட்டார்.

"15 வயது முதல் 29 வயது வரை உள்ள இளைஞர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுவது மிகவும் துரதிஷ்ட வசமானது.

2003 முதல் எச்.ஐ.வி எயிட்ஸ் பரவுவது படிப்படியாக அதிகரித்து வருகிறது.

2030 ஆம் ஆண்டில் இந்த நோயை அகற்றுவதற்கான ஒரு முறையை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

இந்த நோயாளிகளில் சுமார் 95 சதவீதமானோரை நாம் சிகிச்சைக்கு பரிந்துரைக்க முடியும்.

மருத்துவ நிபுணர்களாகிய நாம் இந்த நோய்களைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தாலும் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த, அரசியல் ஆதரவு தேவை என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண கூடைப்பந்தாட்டம் சம்பியனான உடுப்பிட்டி மகளிர்



வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றி பாடசாலையின் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளது.

உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதியுடன் யாழ் ஸ்புட்ணி விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாணத்தை உள்ளடக்கி மாபெரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தியது

இதில் 13 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் யாழ்.கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்றது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ் இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆட்டநேர முடிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். பாடசாலை வரலாற்றில் முதன்முறையாகச் சம்பியன் கிண்ணத்தை சுவீ கரிப்பது இதுவே முதல் தடவையாகும். (6-90)

# வெளியேறியது இங்கிலாந்து அணி அரையிறுதியில் வெஸ்ட் இண்டீஸ்

ஐக்கிய அரபு எமிரேட்சில் பெண்களுக்கான "ரி-20" உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதன் "பி" பிரிவில் இங்கிலாந்து (6 புள்ளி), தென் ஆபிரிக்கா (6), வெஸ்ட் இண்டீஸ் (4) அணிகள் முதல் 3 இடத்தில் இருந்தன.

நேற்று முன்தினம் நடந்த கடைசி லீக் போட்டியில் இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. "டாஸ்" வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி பீல்டிங் தேர்வு செய்தது.

இங்கிலாந்து அணிக்கு மையா (14), டேனி வயாத் (16) ஜோடி தொடக்கம் தந்தது. நாட்சிவர் (57), அரைசதம் கடந்தார். இங்கிலாந்து அணி 20 ஓவரில் 141/7 ரன் எடுத்தது.

அடுத்து களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு கப்டன் ஹேலே மாத்யூஸ் (50), குயானா (52) ஜோடி சூப்பர் தொடக்கம் தந்தது. டாட்டின் 19 பந்தில் 27 ரன் எடுக்க, வெஸ்ட் இண்டீஸ் அணி 18 ஓவரில் 144/4 ரன் எடுத்து 6 விக்கெட்டில் வெற்றி பெற்றது.

இதையடுத்து பட்டியலில் தலா 6 புள்ளியுடன் முதல் இரு இடங்களைப் பெற்ற வெஸ்ட் இண்டீஸ் தென் ஆபிரிக்க அணிகள் அரை யிறுதிக்கு முன்னேறின. இங்கிலாந்து 6 புள்ளி பெற்ற போதும், ரன்ரேட் அடிப்படையில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு தொடரில் இருந்து வெளி யேறியது.

அரையிறுதியில் ஆஸி- தென் ஆபிரிக்காவும், நாளை வெஸ்ட் இண்டீஸ்- நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3243

### அமிர்தா




### தனுசன்




### மதுஷா




### விதுஷன்




### லக்ஷனா




### அபிஷாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு களத்தரிசிப்பு

## பலருக்கு சிவப்பு எச்சரிக்கை

(நெளுக்குளம்)

**புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் விழிப்புணர்வு, துப்பரவு பணிகள் நேற்றுக் காலை இடம்பெற்றன.**

தற்போது மழையுடன் கூடிய காலமாகையால் டெங்கு நோய் வேகமாகப் பரவிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப் படுத்தும் நோக்கில் புதுக் குடியிருப்பு பிராந்திய பணிமனையின் ஏற் பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினருடன் இணைந்து புதுக்குடியிருப்பு நகரை அண்மித் துள்ள பகுதிகளில் துப்பரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பரிசோ தனை நடவடிக்கையும் மேற்கொள் ளப்பட்டிருந்தது.

டெங்கு பரிசோதனை நடவ டிக்கையின்போது டெங்கு நோய் பரவும் சாத்தியமாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளிற்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் துப்பரவு செய்யப்ப டாத காணிகள், வெற்றுக் காணி கள், கடைகளின் உரிமையாளர் களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறி வுறுத்தல் வழங்கப்பட்டிருந் தது.

குறித்த நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்றுநோய் வைத்திய அதிகாரி வி.விஜி தரன், புதுக்குடியிருப்பு பிர தேச செயலாளர், புதுக்குடி யிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புதுக் குடியிருப்பு பிரதேச செய லகத்தின் கீழுள்ள சமுர்த்தி பயனாளர்கள், சிவில் பாதுகாப்பு உத்தி யோகத் தர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸார், ஆடை தொழிற் சாலை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு துப்பரவு பணி யினை மேற்கொண்டிருந்த னர். (6-299)

# நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் மற்றும் பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் அதன் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பரந்தன் சிவபுரம் பகுதி யில் தெரிவு செய்யப்பட்ட வரு மானம் குறைந்த 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு அதன் உரிமையாளரிடம் நேற்று காலை 9 மணிக்கு கை யளிக் கப்பட்டது

அதனைத் தொடர்ந்து பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பன்னங்கண்டி கிரா மத்தில் உள்ள குடும்பம் ஒன்றிற்கும் குறித்த வீடு அமைத்து வழங்கப்பட் டுள்ளது.

குறித்த நிகழ்வுகளில் இராணுவ உயரதிகாரிகள், இரா ணுவ பதவி நிலை உத்தி யோகத்தர்கள் இரா ணுவத்தி னர் மற்றும் பொதுமக்கள் வீட் டின் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-315-316)


1ஆம் ஆண்டு

நினைவு அஞ்சலி

மண்ணில் 23 . 01 . 1956

விண்ணில் 29 . 09 . 2023



அமரர். வீரகத்தி குகராசா

(முன்னாள் இ.போ.ச சாரதியும் உழவு இயந்திரத் திருத்துநரும்)

திதி:பௌர்ணமி 17.10.2024

பொன்மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் கொண்டவரே
மீளாத்துயில் கொண்டு ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் கொண்டு
அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

(433)

உங்கள் நினைவுகளுடன்
மனைவி கு.சறோஜினிதேவி (ஓய்வு பெற்ற கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்)


# இராசிபலன்

17.10.2024
புரட்டாதி 31, வியாழக்கிழமை
பூரணை பிற்பகல் 5.42 மணிவரை

ரேவதி பிற்பகல் 5.42 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் -1.32- 3.02 மணிவரை

பூரணை விரதம், சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்.
மகம், பூரம்

**வளவன்**

**மேஷம்** — உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.

**கடகம்** — எதிர்ப்பாக இருந்த வர்கள் மனம் மாறுவர், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்

**துலாம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்ப டும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெற லாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மகரம்** — ஏட்டிக்கு போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உற்சாகத் தோடு செயற்படும் நாள், பொரு ளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** — பொது வாழ்வில் மதிப் பும் மரியாதையும் உய ரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமை யும், காரிய அனுகூலமுண்டு, வழி பாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** — செய்தொழிலில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையலாம், பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — பூர்வீகச் சொத்து சம் பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிற ருக்கு உதவும் எண் ணம் உருவாகும், விருந்தினர் களின் சந்திப்பு இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு

**கும்பம்** — பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெற லாம், செல்வநிலை உயரும் நாள், செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்க ளின் தகுதியை உயர்த் தும், மனநிறைவு கூடும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** — கேளிக்கை கொண் டாட்டங்களில் நாட் டம் செல்லும், குடும் பத் தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், காரிய அனு கூலமுண்டு.

**தனுசு** — சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண் ணும் கருத்துமாக இருப்பீர்கள், நண்பர்களின் சந்திப் பால் பரவசமடைவீர்கள், வாகன சுகமுண்டு.

**மீனம்** — மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து விட்டு நீங்களும் வாங்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரி யம் சாதிப்பீர்கள், வழிபாடு ஆதாயம் தரும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியர்வையைச் சிந்துங்கள் நீங்கள் நன்றாக வாழ்வீர்கள்.**

# திருமறைக் கலாமன்றத்தின் 'சித்திர முத்திரைகள்' கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் "சித் திர முத்திரைகள்" என்னும் ஓவிய, கைவினைப் பொருட் களின் கண்காட்சி நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி திங் கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

"சித்திர முத்திரைகள்" கண் காட்சியின் ஆரம்ப நிகழ்வில் சித்திரப் பாட ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி ஜெயராணி அம்பலவாணர் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கலைத்தூது அழகியல் கல் லூரியில் சித்திரப் பாடத் தையும் ஏனைய நுண்கலைப் பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சி இம் முறையுடன் எட்டாவது தட வையாக இடம்பெறுகின்றது.

இக்கண்காட்சியில் அயல் பாடசாலைகளில் சித்திர பாடத் தைப் பயில்கின்ற மாணவர்க ளது ஓவிய, கைவினைப் பொருட்களும் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (6)

# திருடப்பட்ட 16 பவுண் நகைகள் மீட்பு

## ஐவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸா ரின் அதிரடி நடவடிக்கை மூலம் 25 லட்சம் ரூபாய் பெறுமதியான 16பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டி ருப்பதுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கடந்த பத்தாம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன் றில் பகல் வேளையில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த 16பவுண் நகைகள் மற்றும் தொலை பேசி ஆகியவற்றைக் கொள் ளையிட்டுத் தப்பித்திருந்த னர்.

கணவன்-மனைவி இரு வரும் பணிக்குச் சென்று வீடு திரும்பிய நிலையி லேயே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது கண்ட றியப்பட்டது அது தொடர்பில் பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச் சேரி பொலிஸில் முறைப் பாடும் பதிவு செய்யப்பட்டி ருந்தது.

இந் நிலையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் நேற்று முன்தினம் திருட்டுச் சந்தேக நபர் களான இரண்டு பெண்கள் மற்றும் நகைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்த கர்கள் இருவர் உட்பட ஐவரைக் கைது செய்தி ருந்தனர்.

அத்தோடு உருக்கப்பட்ட நிலையில் நகைகளும் திருட்டுச் சந்தேக நபர்க ளான பெண்களிடம் இருந்து நகை விற்ற 7இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகை விற்ற பணத்தில் இருந்து கொள்வனவு செய் யப்பட்ட ஆடம்பர மின் உப கரணங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன. (6-30-33)

# யாழ். பொதுநூலகத்தில் அப்துல்கலாமின் ஜனனதினம்



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் 93ஆவது பிறந்தநாள் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இடம் பெற்றது.

இதில் அப்துல்கலாமின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். இந்தியத் துணை தூதர் சாய் முரளி, யாழ் மாந கர சபை ஆணையாளர், யாழ். பொதுசன நூலக பிரதம நூல கர் மற்றும் இந்தி யத் துணைத் தூதரக அதி காரிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (6-33)

# கந்தபுராண விழா 3 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மண்ணில் மாபெரும் கந்தபுராண விழாவின் 3 ஆம் நாள் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை, காலை 8.30 மணிக்கு தொண்டைமா னாறு சந்நிதியான் ஆச்சி ரமத்தில் நடைபெற வுள்ளது.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தலைமை யில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முக தாஸ் கலந்து கொள்ளவுள் ளார். (நி-6)

# ICFS கல்வி நிலையத்தின் உயர்கல்வி வாய்ப்பு

## யாழில் 19, 20, ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

ICFS நிலையத்தினரால் ஆறாம் கட்ட கல்வி நிகழ்ச்சி எதிர்வரும் 19,20 ஆம்திகதிகளில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது என ICFS கல்வியின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஷர்மிளா சந்திரவதனி தெரிவித்துள் ளார்.

இந்நிகழ்வில் தகுதி யுடை வர்களுக்கு திறன் இடம் பெயர்வு விசா மூலம் முழுநேர வேலை மற்றும் குடும்பத்துடன் இடம்பெயரவாய்ப்பு கிடைக்கும்.

மேலும் பட்டம் பெற்ற மற்றும் திறமையான தொழில் களில் விரிவான பணி அனுப வம் உள்ள நபர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும். அடுத்த வருடும் ஜனவரி 2025 நுழை வுத்தேர்வில் சேர எதிர்பார்க் கும் மாணவர்களும் இதில் பங்குகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர்.

அவுஸ்திரேலியா, இங்கி லாந்து, கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் பல உயர் கல்வி வாய்ப்புகளுடன் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகளை சந் திக்க தமது குழு வர உள் ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# வெளிநாடு அனுப்புவதாக ரூ.80 லட்சம் பணமோசடி

## கைதான நபர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக யாழைச் சேர்ந்த இளைஞனிடம் 80 லட்சம் ரூபாயை மோசடி செய்த நபர் நீதிமன்ற உத்தரவில் விளக் கமறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனை வெளிநாடு அனுப்பிவைப்பதாகக் கூறி 80 லட்சம் ரூபாயை பெற்றுக் கொண்டு, இளைஞனை வெளிநாட்டிற்கு அனுப்பிவைக் காத நிலையில், இளைஞன் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெ டுத்த பொலிஸார் பணத்தினை பெற்றுக்கொண்டவரை கைது செய்து விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, சந்தேக நபரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (6-33)

# பலாலியில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் மீளக் குடியேறாத மக்க ளுக்கான பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலய வளாகத்தில் இடம்பெறும்.

மேற்படி பொதுக் கூட்டத் திற்கு ஜனாதிபதியின் அர சியற் பிரமுகர்கள் வருகை தரவுள்ளதால் வலிகாமம் வடக்கு மீளக்குடியேறாத மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வடக்கின் சமூக அமைப்புக்கள் அறி வித்துள்ளனர். (6)

# நவாலி திருட்டுச் சம்பவம் சந்தேக நபர் விளக்கமறியலில்

## 3 1/2 பவுண் நகை மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி பகுதியி லுள்ள பொலிஸ் உத்தியோகத் தரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன களவாடிய சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கைது செய்து குறித்த நபரிடம் இருந்து மூன்றரைப் பவுண் நகையை யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மீட்ட னர். கடந்த வாரம் வீட்டின் குளி யலறை ஊடாக உள் நுழைந்த திருடர்கள் ஆறரைப் பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன் றத்தில் முற்படுத்தினர்.

இந்நிலையில் பிரதான சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (6)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. (படம்: சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் பொதுமக்களை ஏமாற்ற முடியாது

## மல்வத்து மகாநாயக்கர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போதைய நெருக்கடியான தருணத்தில் ஆட்சிக்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்காமல், நெருக்கடியை சமாளிக்க எதிர்க் கட்சிகள், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப் பொடுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இமிதியாஸ் பாக் கீர் மார்க்கர் தலைமையிலான குழுவுடனான சந்திப்பின் போது அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுமாறு நீண்டகாலமாக வலியுறுத்திய போதிலும் அது பலனளிக்கவில்லை என தேரர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரத்தை நாடாமல், நாட்டு நலனுக்காக அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதே காலத்தின் தேவையாகும். அரசியல் கட்சிகளின் நலனில் அக்கறை காட்டாமல், மக்கள் நலனே முதன்மையாக இருக்க வேண்டும்.

முன்னரைப் போன்று அரசியல்வாதிகள் இனி பொதுமக்களை தவறாக வழிநடத்த முடியாது.

தேர்தல்களின் போது எப்படி சரியான முடிவுகளை எடுப்பது என்பது பற்றி மக்கள் இப்போது நன்கு உணர்ந்துள்ளனர் என்று மகா நாயக்கர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# சதொச புதைகுழி வழக்கு நவம்பர் 21 ஆம் திகதி தவணை

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி மற்றும் மன்னார் நகரப் பகுதியில் காணப்படும் மன்னார் சதொச மனித புதைகுழி ஆகிய இரு மனித புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார்.

குறித்த வழக்கு விசாரணைகள் குறித்து அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது வைத்தியர் வி.எல். வைத்தியரெட்ண, சி.ஐ.டி உத்தியோகத்தர்களும், காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பான சட்டத்தரணிகளும், அரச சட்டத் தரணிகளும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

இதன் போது ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்விற்கு பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற கட்டுக் காவலில் இருப்பதாகவும், அதனை சீ-14 பரிசோதனைக்காக புளோரிடாவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளுக்காக நேற்று வைத்தியரினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அது தொடர்பான நட வடிக்கைகளை மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகளுக்கான அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்பட இருந்தது.

எனினும் அவர் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத காரணத்தினால் குறித்த அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி (21-11-2024) தாக்கல் செய்வதாக தவணை எடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகளை சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் அன்றைய தினம் அறிவிக்கப்படும். (6-285)

# எழுதுமட்டுவாள் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## 800 லீற்றர் கோடா மீட்பு

(கரணவாய்)

எழுதுமட்டுவாள் பகுதியில் கசிப்பு உற்பத்திற்கு பயன் படுத்திய 800 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

எழுதுமட்டுவாள் காட்டுப் பகுதியில் பல வருட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று புதன் கிழமை அதிகாலை முற்றுகையிடப்பட்ட போது 800 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக சாவகச்சேரி மதுவரி திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் உதவி மதுவரி திணைக்கள ஆணையாளரின் ஆலோசனையில், யாழ். பருத்தித்துறை மதுவரி அத்தியட்சகரின் வழி நடத்தலில் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பின் போது இக் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-30-60)

# தேரடிச் சித்தரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமுறை மற்றும் நற்சிந்தனை, பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு "யோகர் சுவாமி எங்களின் அவதாரம்" எனும் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் நிகழ்த்தவுள்ளார். (6)

# சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர், முதியோர் தின விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.கிருஷ்ண மூர்த்தி மற்றும் சிறுப்பிட்டி கிழக்கு முதியோர் சங்கத் தலைவர் அ.அருந்தவநேசன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலைப் பேரா சிரியர் க.சிவானந்த மூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக முதியோர் சங்கச் செயலாளர் மு.விக்கினேஸ்வரன், சிறுப்பிட்டி கிழக்கு முன்னாள் கிராம அலுவலர் திருமதி. சிவதீசன் ஜெனிதா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலு வலர் கா. குகதாசன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரன் உமாகௌரி, சமுர்த்தி உத்தியோகத்தர் வி. தனீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (அ)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

**வைத்தியம்**

வலிப்பு நோய் | கை விறைப்பு | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(2323)

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994-இந்து
நட்சத் திரம்: கேட்டை
4 இல் சூரி செவ்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: B.Com, வங்கியாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/14840

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம் :5'9"
தகைமை/தொழில்: A/L ,own shop
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14841

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா-28 1/4
உயரம் :5'5"
தகைமை/தொழில்: A/L, Seaman
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14846

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம் : ரோகினி
12 இல் செவ்
தகைமை/தொழில்: BSc,MSc (following), Lecturer(USA)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14865

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பரணி
4 இல் செவ்
தகைமை/தொழில்: Bsc, Msc(following)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14866

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம் :5'4"
தகைமை/தொழில்: சித்த மருத்துவம் (final year)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14871

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தான் சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர்



(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத், எஸ்.சி.ஓ., எனப்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்க பாகிஸ்தானுக்குச் சென்றுஉள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ்ஷெரீபை நேற்று முன்தினம் சந்தித்தார்.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில், ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் பங்கேற்க இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அந் நாட்டுக்கு சென்றுள்ளார். இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, இஸ்லாமாபாத்தில் எஸ்.சி.ஓ., உறுப்பு நாடுகளுக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் இரவு விருந்தளித்தார்.

இதில் பங்கேற்ற நம் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை, அவர் கைகுலுக்கி வரவேற்றார். அப்போது இருவரும் சில நிமிடங்கள் உரையாடிய தாகக் கூறப்படுகிறது.

ஜம்மு - காஷ்மீர் உட்பட பல்வேறு விவகாரங்களில், இந்தியா - பாகிஸ்தான் இடையே பல ஆண்டுகளாக பிரச்சினை நீடிக்கும் நிலையில் ஒன்பது ஆண்டுகளுக்கு பின் பாகிஸ்தானுக்கு அமைச்சர் ஜெய்சங்கர் சென்றுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கடைசியாக மறைந்த பா.ஜ., மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் வெளியுறவு அமைச்சராக இருந்த போது 2015 டிசெம்பரில் பாகிஸ்தானுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கனடாவின் விசாரணை

## இந்தியாவுக்கு அ

(வோஷிங்டன்) —

**சீக்கிய பிரிவினைவாதத் தலைவர் கொல்லப்பட்டது தொடர்பான கனடா இந்தியாவை ஒத்துழைக்குமாறு அ தியுள்ளது.**

அதேநேரம், இரு பங்காளி நாடுகளுக்கு இடையேயான பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில் படுகொலை, சதித் திட்டம் குறித்த கனடாவின் குற்றச்சாட்டுகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறும் அதன் விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறும் இந்தியாவுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

வோஷிங்டன், டி.சி.யில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் இந்த அழைப்பினை விடுத்தார்.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை , கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய அர



## வட-தென் கொரிய இணைப்பு வீதிகள் தகர்ப்பு



(பியாங்யாங்)

வடகொரியா தனது பகுதியை தெற்குடன் இணைக்கும் வீதிகளின் பல பகுதிகளை நேற்று முன்தினம் செவ்வாயன்று வெடித்துச் சிதறடித்ததாகத் தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள தென் கொரியா,

வட கொரிய இராணுவம் கியோங்குய் மற்றும் டோங்ஹே வீதிகளின் இணைப்பைத் துண்டிக்கும் நோக்கில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தது.

எனினும், இதனால் தமது இராணுவத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

வடகொரிய இராணுவத்தின் நடவடிக்கைகளை தென்கொரியஇராணுவம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது மற்றும் தென்கொரிய அமெரிக்க ஒத்துழைப்பின் கீழ் பலப்படுத்தப்பட்ட கண்காணிப்புக்கு மத்தியில் உறுதியான தயார் நிலையை பராமரிக்கிறது.

கடந்த வாரம், வட கொரியாவின் பிராந்தியத்தை தென் கொரியாவிலிருந்து முற்றிலும் பிரிக்கும் திட்டத்தை பியாங்யாங் இராணுவம் அறிவித்தது.

வடகொரியா வீதிகளை தகர்க்கத் தயாராகி வருவதாக கடந்த திங்கட்கிழமை தென் கொரியாவை எச்சரித்தும் இருந்தது.

கொரிய பகுதிகள் கியோங்குய் கோட்டுடன் வீதிகள் மற்றும் ரயில்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இது தெற்கின் மேற்கு எல்லை நகரமான பாஜுவை வடக்கின் கேசோங்குடன் இணைக்கிறது. (நி)

## 2030 இற்குள் நேட்டோ ரஷ்யா தாக்கலாம்

### எச்சரிக்கை விடுக்கும் ஜேர்மன்



(பேர்லின்)

2030ஆம் ஆண்டுக்குள் ரஷ்யா நேட்டோவைத் தாக்கும் எனவும் உக்ரைனின் மேற்கத்தேய ஆதரவு நாடுகளை நாச வேலைகள் மூலம் சீர்குலைக்கும் முயற்சிகளை ரஷ்யா முடுக்கிவிட்டதாக ஜேர்மன்உளவுத்துறைத்தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அமெரிக்காவிற்கு அடுத்த படியாக உக்ரைனின் இரண்டா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ணைக்கு ஒத்துழைக்கவும் மெரிக்கா அறிவிப்பு

## ர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் டாவின் விசாரணைக்கு அமெரிக்கா வலியுறுத்



சாங்கம் தனிப்பட்ட முறையில் என்னைத் தாக்கி வருவதாக குற்றம் சாட்டினார்.

அதேநேரம் நாட்டின் பொதுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நடவடிக்கைகளில் இந்தியாவின் முகவர்கள் ஈடுபட்டிருப்பதற்கான "தெளிவான மற்றும் வலுவான சான்றுகள்" உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பதற்றமான இந்தியா-கனடா உறவுகளுக்கு ஒரு பெரிய அடியாக உயர் ஆணையர் உட்பட ஆறு இந்திய இராஜ தந்திரிகளை கனடா திங்கட்கிழமை நாட்டிலிருந்து வெளியேற்றியது.

அதேநேரம் செயல் உயர் ஆணையர் உட்பட ஆறு உயர்மட்ட கனேடிய இராஜதந்திரிகளை வெளியேற்ற உத்தரவிட்டதன் மூலம் இந்தியா பதிலடி கொடுத்தது.

அத்துடன், கனடாவின் வெளியேற்ற அறிக்கைக்கு முரணாக கனடாவில் இருந்து தனது தூதரை திரும்பப் பெற்றதாகக் கூறியமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# நட்டோவை
# ம்

ன்



ளை
ஜேர்
கள்
னர்.
படி
ர்டாா.

வது பெரிய இராணுவ ஆதரவு நாடாக ஜேர்மனி இருக் கும் நிலையில் இந்த எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"ஆளணிகள் மற்றும் ஆயுதங்களைப் பொறுத்த வரை, ரஷ்யப் படைகள் நேட்டோவிற்கு எதிராக இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் தாக்குதலை நடத்தும் திறன் கொண்டதாக இருக்கும்" என்று BND வெளிநாட்டு உளவுத்துறை தலைவர் புருனோ கால் பாராளுமன்ற விசாரணையில் தெரிவித்தார்.

"விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாங்கள் ரஷ்யாவுடன் நேரடி மோதலில் இருக்கிறோம்" என்றும், அமெரிக்கா தலைமையிலான இராணுவக் கூட்டணியுடன் நேரடி மோதலை ரஷ்யா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொஸ்கோவிற்கும் அமெரிக்கா தலைமையிலான இராணுவக் கூட்டணிக்கும் இடையே ஒரு நேரடி மோதல் "ரஷ்யாவிற்கு ஒரு விருப்பமாக மாறுகிறது" என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் தோன்றும் வால் நட்சத்திரம்



80 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியை கடந்து செல்லும் வால் நட்சத்திரம் தற்போது தென்பட தொடங்கியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். விண்வெளியில் பல கிரகங்களை தாண்டி பயணிக்கும் வால்மீன்கள் சூரிய குடும்பத்திற்குள் புகுந்து செல்வது உண்டு. அவ்வாறாக செல்லும் வால்மீன்களில் சிலவற்றை அதிஷ்டம் இருந்தால் வெறும் கண்களாலேயே பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும்.

அவ்வாறான ஒரு அரிய வால்மீன் தற்போது பூமியை கடந்து சென்று கொண்டிருப்பதை வானியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இந்த வால்மீனை சி/2023 என வானியல் விஞ்ஞானிகள் பெயரிட்டனர்.

80 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை சுற்றி வந்து திரும்ப செல்லும் இந்த வால்மீன் தற்போது சூரியனை சுற்றி பூமிக்கு அருகில் கடந்து செல்கிறது. சூரியன் மறையும் நேரத்தில் மேற்கு திசையில் இந்த வால்மீனை பார்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. சிறிய அளவிலான தொலைநோக்கிகள் கொண்டு பார்த்தால் அதன் நீண்ட வால் பகுதியையும் காண முடியும் என்கின்றனர் வானியல் ஆர்வலர்கள். இம் மாதம் 24 ஆம் திகதி வரை இந்த வால் நட்சத்திரத்தை காண முடியும். (நி)

# உயிருள்ள எதையும் டி.வியில் காட்டக் கூடாது

## தலிபான் அதிரடி உத்தரவு



(காபுல்)

2021 ஆம் ஆண்டில் இருந்து ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் தலிபான் ஆட்சியில் இஸ்லாம் மதத்தின் ஷரியத் சட்டத்தின் பெயரால் மக்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகிறது. பொது இடங்களில் நடமாடுவது, பண்டிகை கொண்டாட்டங்கள், ஆண்கள் சவரம் செய்வது வரை அனைத்துக்கும் தனித்தனி விதிகள் உள்ளன.

குறிப்பாக பெண்களுக்கு உடை சுதந்திரம், கல்வி, சமூக வாழ்க்கை என அனைத்தும் மறுக்கப்பட்ட அவலமான சூழலே அங்கு நிலவுகிறது. 2021 அதிகாரத்துக்கு வந்த பின்னர் தலைநகர் காபுலில் உள்ள மகளிர் அமைச்சகம் அறநெறி அமைச்சகமாக மாற்றப்பட்டது. இதன் மேற்பார்வையிலேயே மேற்கூறிய கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த அறநெறி அமைச்சகம் தற்போது புதிய கட்டுப்பாடு ஒன்றை விதித்துள்ளது.

அதாவது, உயிர் கொண்டு அசையும் எந்த ஒரு புகைப் படங்களையும் செய்தி ஊடகங்களில் வெளியிடக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தலிபான் சட்டப் பிரிவு 17 இன் படி உயிருள்ளவற்றின் புகைப்படங்கள் ஊடகங்களில் காட்டப்படுவது தடை செய்யப்படுகிறது.

இந்த புதிய விதியை ஆப்கனிஸ்தானின் பல்வேறு இடங்களில் தலிபான் கட்டுப்பாட்டு ஊடகங்கள் செயற்படுத்த தொடங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மனிதர்களின் புகைப் படங்களை வெளியிடாமல் செய்தி ஊடகம் எவ்வாறு செயற்படும் என்ற கேள்வியும் எழுந்துள்ள நிலையில் இந்த புதிய விதியை தீவிரமாகக் கடைபிடிக்க செய்தியாளர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக சமீபத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி பெண்கள் தங்களின் முகத்தை வெளியே காட்டவும், பொது இடங்களில் சத்தமாகப் பேசவும், பாடவும் தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தலைவர்களுடனான பேச்சுக்கள் நம்பிக்கை அளிக்கின்றன

## ஜப்பான் தூதுவர் பாராட்டு



(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகத்திற்கான முன்னுதாரணம் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோசி ஹிடேகி பாராட்டியுள்ளார்.

இலங்கையின் சமீபத்தைய ஜனாதிபதித் தேர்தல் அமைதியான ஜனநாயக ரீதியிலான அதிகார மாற்றத்திற்கான நாட்டின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கொள்கைகளிற்கு ஊக்கமளிக்கும் அர்ப்பணிப்பிற்காக இலங்கையின் அரசியல்வாதிகள் பொதுமக்களிற்கு ஜப்பான் தூதுவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய தலைவர்களுடனான எனது பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை அளிப்பவையாக காணப்பட்டன. ஆட்சிமுறை சீர்திருத்தம், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான தங்கள் அர்ப்பணிப்பை அவர்கள் வலியுறுத்தினார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழலை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள ஜப்பானிய தூதுவர் ஆட்சிமுறை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதே புதிய அரசாங்கத்தின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக காணப்பட வேண்டும் என வும் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 140 | 150 | 150-220 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 350-400 | 400 |
| தக்காளி | 300 | 300 | 400 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 180 | 150-200 | 200 |
| கோவா | 250 | 240 | 250 | 280 | 250 |
| கரட் | 150 | 200 | 200 | 270 | 200 |
| பூசணி | 100 | 60 | 80 | 60 | 120 |
| புடோல் | 80 | 140 | 80 | 180 | 250 |
| வாழைக்காய் | 200 | 160 | 130 | 100-120 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 300 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 450 | 400 | 350-400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 120-170 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 150 | 280 | 250 | 350 | 400 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 150 | 160 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 150 | 200 | 80-150 | 200 |
| போஞ்சி | 480 | 450 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 130 | 80 | 70 | 60 | 120 |
| தேசிக்காய் | 500 | 300 | 400 | 300-400 | 550 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 130 | 90-170 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 450 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 100 |

# இன்று ஒரு தகவல் 243



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# இல்லத்துறவி

இல்லற வாழ்க்கை வோரடிக்குது சேர். பேசாமல் துறவி ஆகிவிடலாம் என்று பார்க்கின்றேன் என்றார் ஒருவர்.

ஆக வேண்டியது தானே என்றேன். அது தான் பார்க்கின்றேன். ஆனால் சம்சாரமும் பிள்ளைகளும் விடமாட்டேன் என்கிறார்கள். அது தான் இடைஞ்சலாக இருக்கிறது என்றார்.

துறவு என்றால் ஏதோ ஒரு காவி வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு, தாடியை நீளமாக வளர்த்துக் கொண்டு, காடு எங்கேயிருக்கிறது? என்று தேடிக் கொண்டே போய் ஒரு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்துவிடுவது என்று இவரை மாதிரி பலபேரு நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மிகவும் தப்பு.

துறவியாகப் போய்விடுவது என்றால் ஒரே தடவையாக சாமியாராகப் போய் விடுவது இல்லை. அது வேறு மாதிரி.

இல்லறத்திலே இருந்து கொண்டு கூட துறவியாக இருக்க முடியும். அப்படி முடியும் என்று நிரூபித்துக் காட்டுவதற்கு அந்தக் காலத்திலேயே ஒருவர் இருந்தார்.

வேறு யாரு? சீதையினுடைய அப்பா! ஜனகர்!

அப்போது மிதிலா நகரிலே இருந்த பல முனிவர்கள் இதை நம்பவில்லை. ஜனகர் மேலே அவர்களுக்கெல்லாம் சந்தேகம்.

அது எப்படி? இவர் ராஜபோகங்களுக்கு மத்தியிலே சுகமாக இருக்கிறவர்! இவர் எப்படி துறவியாக இருக்க முடியும்? என்று அவர்களுக்குள்ளேயே பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

இந்த "கிசுகிசு" ஜனகர் காதிலும் போய் லேசாக விழுந்தது. ஜனகர் பார்த்தார். சரி இந்த முனிவர்களுக்குத் துறவு என்றால் என்ன என்று புரிய வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அடுத்த நாளே அரண்மனையிலேயிருந்து ஒரு ஆள் இந்த முனிவர்களைத் தேடிவந்தார்.

நாளைக்கு மதியம் நமது ராஜா உங்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து வைக்கப் போகிறார். நீங்கள் எல்லோரும் அதிலே வந்து கலந்துகொள்ள வேண்டும் என்றார்.

அந்த முனிவர்கள் நல்ல சாப்பாட்டைக் கண்ணாலே பார்த்தே நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. அப்படி இருக்கின்றபோது அரண்மனை விருந்து என்றால் வேண்டாம் என்றா சொல்லுவார்கள்?

அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்திலே அத்தனை பேரும் அரண்மனை விருந்து மண்டபத்திலே ஆஜர்! 50 முனிவர்கள் அவர்களுக்கு 50 இலை போட்டு பலவிதமான தின்பண்டங்களை அதிலே பரிமாறி இருந்தார்கள்.

ஆனால் அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கிக் கொண்டு இருந்தது.

அது எப்ப சாப்பிட்டில் விழுமோ என்று அதைப்பார்த்துக் கொண்டே முனிவர்கள் சாப்பிட்டார்கள்.

மறுபடியும் நிறைய கொண்டு வந்து வைத்தார்கள். இவர்களும் வயிறு நிறைய சாப்பிட்டு முடித்தார்கள்.எல்லாம் சாப்பிட்டு முடிந்த பிறகு ஜனகர் வந்தார். முனிவர்களுக்கு நமஸ்காரம் செய்தார். சாப்பாடு நன்றாக இருந்ததா? என்று கேட்டார். அதுமட்டுமில்லை சாம்பார் எப்படி இருந்தது? காய்கறி எப்படி இருந்தது? வறுவல் எப்படி இருந்தது? என்று வரிசையாகக் கேட்க ஆரம்பித்தார். இதற்கு அவர்கள் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார்கள்.

உடனே ராஜா அந்தப் பக்கம் திரும்பி என்ன எல்லோருக்கும் சரியாக சாப்பாடு போட்டீர்களா? இல்லையா? என்று வேகமாக கேட்க ஆரம்பித்தார்.

உடனே முனிவர்கள் வாயைத் திறக்க ஆரம்பித்தார்கள். அவர்களை ஏன் கேட்கிறீர்கள் நாங்களே பதில் சொல்லுகின்றோம். அவர்கள் மிகவும் நன்றாகப் பரிமாறினார்கள். நாங்களும் வயிறு புடைக்கச் சாப்பிட்டோம். என்றார்கள்.

பின்பு எப்படி இருந்தது என்று கேட்டால் ஏன் உங்களாலே பதில் சொல்ல முடியவில்லை என்றார் ராஜா.

எப்படிச் சொல்ல முடியும்? எங்கள் நினைப்பு முழுவதும் சாப்பாட்டிலே எங்கே இருந்தது? அந்தத் தலைமுடி எப்போது சாப்பாட்டிலே விழுமோ? என்று அதையே தானே நினைத்துக் கொண்டு இருந்தோம் என்றார்கள்.

இப்பொழுது ஜனகர் சொன்னார், அதே மாதிரித்தான் நானும் இருக்கிறேன். பிரம்மத்தையே நினைத்துக் கொண்டு இருக்கின்ற எனக்கு இந்த ராஜபோகங்கள் சுகமாக இல்லையா என்று கேட்டால் சொல்லத் தெரியுமா? என்று கேட்டார் ஜனகர்.

முனிவர்களுக்கு அதற்கு அப்புறம் தான் ஒரு தெளிவு உண்டாகியது. ஒருவர் எங்கே இருந்தால் என்ன சார்? எதை நினைத்துக் கொண்டு இருக்கிறார் என்பது தான் முக்கியம்.

இல்லறத்திலே இருந்து கொண்டு பிரம்மத்தை நினைத்துக் கொண்டு இருக்கிறவர்களும் உண்டு. துறவறத்திலே இருந்து கொண்டு இல்லறத்தை நினைத்துக் கொண்டு இருக்கிறவர்களும் உண்டு. நினைப்பு தான் முக்கியம்

இந்தக் காலத்து இல்லறத்துறவி ஒருவரிடம் கேட்டேன். சார் உங்களை இப்படி உட்கார வைத்து உங்கள் சாப்பாடு மேலே ஒரு தலைமுடி தொங்குகிற மாதிரி செய்தால் உங்கள் கவனம் எதிலே இருக்கும் என்றேன். என் கவனம் சாப்பாடிலே தான் இருக்கும். முடியைப் பற்றி கவலைப்பட மாட்டேன் என்றார். ஏன்? என்று கேட்டேன்.

எங்கள் வீட்டிலே சாப்பாட்டிலேதலைமுடி கிடைக்கிறது சகஜம். அதனாலே பழகிப் போய்விட்டது என்றார் மிகவும் நிதானமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடம்பெற்ற அனர்த்த முன்னாயத்த கலந்துரையாடல்



(தருமபுரம்)

அனர்த்த முன்னாயத்த நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடை பெற்றது.

வட கீழ் பெயர்ச்சி பருவ மழை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பருவ மழையின் போது ஏற்படும் அனர்த்தங் களை கட்டுப் படுத்த மேற் கொள்ள வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் தலைமையில் நடை பெற்ற குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகா மைத்துவ உதவிப் பணிப் பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டத்திலுள்ள திணைக் களங்களின் தலைவர்கள், இராணுவம் , பொலிஸார், தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-316)

# சூரியமின்கல யானைவேலி அமைக்கும் பணி முன்னெடுப்பு



(தருமபுரம்)

காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளின் வாழ்வாதார பயிர்களை பாது காக்கும் நோக்குடன் உலக வங்கியின் நிதியுதவி யில் காலநிலைக்கு சீரமை வான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் குறித்த சூரியமின்கல யானைவேலி அமைக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட செம்மன்குன்று பகுதியில் குறித்த பணி ஆரம்பித்து வைக்கப் பட்டது.

குறித்த திட்டமானது வட மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி மேற் கொள்ளப்படுகிறது.

கிளிநொச்சியில் பூநகரி, அக்கராயன்குளம், முழங்காவில் கமநல சேவை நிலையத்திற்குற்பட்ட தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் போன்றவற்றில் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் கால நிலைக்கு சீரமைவான நீர்ப் பாசன விவசாயத் திட்டத்தின் சுற்றுச்சூழல் பாது காப்பு அதிகாரி சாம்பசிவம் கேசிகா, பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.குணசீலன், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (6-316)

# 35 மில்லியன் ரூபாய் செலவில் இரணைமடு வாய்க்கால் புனரமைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி இரணை மடுக் குளத்தின் இடது கரை நீர் விநியோக வாய்க்கால் சீரமைப்பு பணிகள் 35 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் முரசுமோட்டை, ஊரியான், உருத்திரபுரம், பெரிய பரந்தன் ஆகிய பிரதேசங்களுக்கான இடது கரை நீர் விநியோக வாய்க் காலின் நீர் திறந்து விடப்படும் துலுசுப் பகுதியல் ஏற்பட்டிருந்த நீர்க்கசிவினைத் தடுக்கும் வகையிலான சீரமைப்புப் பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் மாகாண நீர்ப்பாசனத் திணைக் களத்தின் 35 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக் கப்பட்டு வருவதாக நீர்ப்பாசன பொறியியலாளர் பிரகாஷ் தெரிவித்துள்ளார்

கடந்த சிறுபோக செய்கை அறுவடையின் பின்னர் குளத்தினுடைய குறித்த புனரமைப்பு பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர் பாசன திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஏனைய நீர்விநியோக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் குறித்த புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (6-315)

# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் மன்னார் மாணவி சாதனை

(மன்னார்)

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 8/9 இல் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி நயோலின் அபிரியானா அன்ரோனியோ குபேரக்குமார் முதலாம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தினையும், மகரகம ஜனாதிபதிக் கல்லூரியில் கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று வரலாற்று சாதனையினை மன்னார் மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும், பெருமையைப் பெறறுத் தந்துள்ளார்.

இவர் 2018ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற English Resitation போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத் தக்கது. (6-285)

# செல்வி காயத்ரி வைகுந்தவாசக்குருக்கள் பரத ஆடல் அரங்கேற்றம்

**"ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்**
**ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்**
**ஆனந்தம் ஆக அகில சராசரம்**
**ஆனந்தம் ஆனந்தக் கூத்துஉகந் தானுக்கே."**

**சிவானந்தம்-பரமானந்தம்**
**சிவனது நடனத்தால் விளைவன**
**திருமந்திரம் - 2725**

ஆனந்தம் என்பது எல்லையில்லாத பேரின்பம் நடனமிடும் இடம் ஆனந்தமானது. ஆடும் நடனத்திற்கேற்ப பாடும் பாடல்களும், போற்றித்துதிகளும், தோத்திரங்களின் ஞானமும் ஆனந்தம் ஆகும். பாட்டு நடனத்திற்கேற்ப இசைக்கப்படும் இசைக் கருவிகளும், வாத்தியங்களும் கூட இன்ப ஆனந்தம் அளிப்பவை. இசைக்கருவிகள்: குழல் யாழ், வாத்தியம், முழல், மத்தளம், கொட்டுக்கருவிகள், தோல்கருவிகள் உலகிலுள்ள அசையும் அசையாப்பொருட்கள் எல்லாம் விருப்பம் கொண்டவன்.

பரத ஆடல் அரங்கேற்றம், 05.10.2024 அன்று யாழ் கலாசார மத்தியநிலைய




மண்டபத்தில், அருள்மிகு நல்லூரா, நல்லைப்பதி கந்தப்பெருமானுடைய ஆலய பிரதம சிவாச் சாரியாக விளங்கும் சிவஸ்ரீ.மு.வைகுந்த வாசகக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாதனா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி காயத்ரி வைகுந்தவாசக்குருக்கள் மற்றும் அரங்கேற்றத்திற்கு அணி செய்யும் கலைஞர்கள் எல்லோருக்கும் அடியேனது பாராட்டுக்கள்.

பரத ஆடல், அற்புதமான நடனங்கள், [illegible] காலத்தில் குருக்கள் ஐயா நடாத்தியது ஓர் விழிப்பை ஏற்படுத்திய அரங்கேற்றமாகும். பரத ஆடல் மன்றத்தில் அவரவர் மனதிலும், வெளியிலும், ஒளியிலும் உயிரிலும் கலந்து அன்பர் உள்ளமும் ஆடரங்காகும் என்பதனை உணரலாம்.

நவராத்திரி காலத்தில் பரத ஆடல் அரங்கேற்றம் கண்டவர்கள் அளப்பெரிய ஆற்றலை அறிந்து உணரலாம். நவராத்திரி காலத்தில் சில அறநெறிப் பாடசாலைகளில் ஆங்காங்கு நடனம், கலை நிகழ்ச்சிகள் காணக்கூடியதாக இருந்தன. இந்நிகழ்ச்சிகள் நடத்தும் மதிப்பிற்குரிய அன்பர்கள் மற்றும் ஆர்வலர்கள் உயர்ச்சிக்கு காரணமானவர்கள் கல்வியோடு நாட்டிய கலைகளையும் கைவிடாது சிறப்புக்களும் மென்மேலும் ஓங்க வேண்டும் என அடியேன் ஈழத்துச்சிதம்பரம் தில்லைக் கூத்தன் திருவடிகளை பிரார்த்திக்கின்றேன், வாழ்த்துகின்றேன். பணிகிறேன்.

**க.கு.க சிவபாலன் (k.k.k)**
**போசகர்,**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்க வாசகர் மடாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 608





இளையபிராட்டி எங்கே தான் போயிருப்பார் என்று தேடிக் கொண்டு புறப்பட்டாள். மூத்த மகாராணியின் அரண்மனையில் ஏதோ சபை கூடியிருக்கிறதென்றும், அங்கே போயிருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டாள்.

ஆகையால் அந்த அரண்மனைக்குச் சென்றாள். வானதி போவதற்குள் அங்கே சபை கலைந்துவிட்டது. பெரிய மகாராணியும் அவருடைய செல்வப் புதல்வர் மதுராந்தகரும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தாள். எதனாலோ இந்தச் செய்தி வானதிக்கு மேலும் கவலை உண்டாக்கியது. அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டாள். அரண்மனை வாசலில் ஜனத்திரளின் பெரும் இரைச்சல் கேட்டது. விடயம் இன்னதென்று தெரியவில்லை. இளையபிராட்டியை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. அரண்மனையில் சேடிப் பெண்களை ஒவ்வொருத்தியாக விசாரித்தாள்.

சற்று முன்னால் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனுடன் இளைய பிராட்டி அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்ததாகவும், பிறகு அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கிச் சென்றதாகவும், ஒரு சேடி கூறினாள். இளைய பிராட்டி தனிமையை நாடிச் செல்லும் சமயங்களில் யாரும் வந்து தொந்தரவு செய்வதை இப்போதெல்லாம் அவர் விரும்புவதில்லை.

ஆகையால் ஓடைப் பக்கம் இளைய பிராட்டியைத் தேடிக்கொண்டு, போகலாமா வேண்டாமா என்று வானதி தயங்கினாள். அச் சமயம் வாரிணி என்னும் மங்கை ஓட்டமாக ஓடிவந்தாள்.

"பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கிவிட்டாராம்!" என்ற பயங்கரச் செய்தியைச் சொல்லிவிட்டு அலறி அழுதாள். மற்றப் பெண்களும் இதைக் கேட்டு 'ஓ' வென்று கதறத் தொடங்கினார்கள். வானதிக்கோ முதலில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை. சும்மா நின்றவளை மற்றப் பெண்கள் உற்று நோக்கினார்கள்.

"அடிப்பாவி! உன்னுடைய துரதிஷ்டத்தினால் தான் இளவரசர் கடலில் மூழ்கினார்!" என்று அவ்வளவு கண்களும் அவளை நோக்கி இடித்துச் சொல்வதுபோல் காணப்பட்டன. வானதியினால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அங்கு நிற்கவும் முடியவில்லை. அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கி ஓடினாள்.

ஓடையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தபோது வானதியின் உள்ளமும் ஓடிக்கொண்டிருந்தது. "இளவரசர் கடலில் மூழ்கிவிட்டார்" என்ற வார்த்தைகளின் பொருள் அவளுக்கு விளங்கியது.

அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை மீறிக்கொண்டு மற்றோர் எண்ணம் மேலெழுந்தது. சென்ற சில தினங்களாகத் தண்ணீரைப் பார்க்கும் போதெல்லாம் அதில் இளவரசரின் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

கரையில் நின்று பார்க்கும் போதெல்லாம் அவருடையே முகம் தத்ரூபமாகத் தண்ணீரில் தோன்றும். தொடுவதற்குப் போனால் மறைந்து விடும். அதன் காரணம் என்ன வென்பது வானதிக்குப் புலனாயிற்று.

இளவரசர் கடலில் மூழ்கிய போது என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்னை அழைத்துமிருக்கிறார். அதை அறியாமல் பாவி நான் கரையிலேயே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்! போனதை நினைப்பதில் இனிப் பயனில்லை. இனிச் செய்யவேண்டியது என்ன?

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# தன்னம்பிக்கையே வெற்றிக்கான வழி



பள்ளத்தாக்கில் விழுந்து கிடப்பவன்
பனிமலைச் சிகரத்தில்
பாதம் பதிக்க மாட்டானா!

கடைசிவரை நம்பிக்கை இழக்காதே
ஏனெனில் கடைசி வரியில் கூட
உனக்கான வெற்றி எழுதப்பட்டிருக்கலாம்...

தொடமுடியாத உயரத்தில் உன் கனவுகள் இருந்தாலும்
தொட்டு விடலாம் என்ற நம்பிக்கையில் போராடு
வெற்றி உன் காலடியில்!

நாம் தோல்வியைக் கண்டு அஞ்சும்
பெண் மான்கள் அல்ல
வெற்றி ஒளிவீசப்போகும் விண்மீன்கள்

ஜெயித்துக் கொண்டே இரு நீ வளரும்
வரைஅல்ல... உன்னை வெறுத்தவர்கள்
உன்னை வாழ்த்தும் வரை தன்னம்பிக்கையுடன் போராடு...

தன்னம்பிக்கை எனும் கூரிய ஆயுதம்
உன்னிடம் இருக்கும் வரைக்கும்
உன்னை யாராலும் வீழ்த்தமுடியாது!

நீ உன் மீது நம்பிக்கை வைத்தால்
எட்டாத உயரத்திலுள்ள சிகரத்தைக்கூட
உன்னால் தொடமுடியும்...

தன்னம்பிக்கை எனும் படியில் காலை
வைத்தவன் தோற்றதாக சரித்திரமில்லை...
எனவே தன்னம்பிக்கையுடன் போராடு!

நீ தொட்டது எல்லாம் தோல்வி என்று துவண்டு
விடாதே.
நீ தன்னம்பிக்கையுடன் கால் எடுத்து வைத்தால்
வெற்றி உன் காலடியில்!

ச. கிஷானா,
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும். - அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## ஆட்சி மாற்றம் மட்டுமல்ல மனப்பாங்கிலும் மாற்றம் வேண்டும்

அறிவு, திறன், மனப்பாங்கு எனும் மூன்று விடயங்கள் மனிதக் கட்டமைப்பில் முக்கிய மானவை.

ஒரு மக்கள் சமூகம் எழுச்சி கொள்கிறது எனில், அங்கு மேற்குறித்த ஆளுமை விருத்தி கள் தன்னிறைவடைந்துள்ளதெனப் பொருள் படும்.

இங்கு அறிவு, திறன், மனப்பாங்கு என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை.

ஆயினும் ஒரு விடயத்தை நாம் இங்கு உன்னிப்பாகக் கவனித்தாக வேண்டும்.

அதாவது ஒருவர் அறிவில், திறனில் பக்கா வாக இருந்தாலும் அவரின் மனப்பாங்கு மந்தமாக அல்லது செயலிழந்திருக்குமாயின் அவரின் அறிவால், திறனால் ஆபத்தேயன்றி ஆக்கம் எதுவும் நடைபெறமாட்டா.

ஆம், இதற்கு ஓர் உதாரணத்தைக் கூற முடியும்.

அதாவது வீதிகளில் குப்பை கொட்டுகின்ற வர்களில் கணிசமானவர்கள் படித்த - பண வசதி படைத்த - தொழில்துறைகளில் உள்ள வர்கள் என இனங்காணப்பட்டுள்ளது.

ஆக, படித்தும் பணவசதி படைத்தும் தொழில்வாய்ப்புகள் கிடைத்தும் சம்பந்தப் பட்டவர்களின் மனப்பாங்கு விருத்தியடை யாமல் சக்குப்பிடித்திருப்பதன் காரணமாக, அவர்களின் செயற்பாடுகள் மக்கள் சமூகத் துக்குத் தீங்கு விளைவிப்பதாக அமைந்து விடுகிறது.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறு வதாயின், படித்தவர்களிடம் நேர்மனப்பாங்கு இல்லையாயின், அவர்கள் தமது அறிவை - ஆற்றலை எதிர்மறையான செயற்பாடு களுக்கே பயன்படுத்துவர்.

இதை நாம் கூறுவதற்குக் காரணம் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்திலும் மக்களில் பெரும்பாலானவர்களின் மனப்பா ங்கு மிகவும் மோசமானதாக இருக்கிறது.

உண்மை. இந்த நாடு பொருளாதாரத்தில் இத்துணை வீழ்ச்சி காண்பதற்கு ஆட்சியா ளர்களின் மனப்பாங்கே மூலகாரணமாகும்.

ஆம், தமிழ் மக்களை - தமிழ் இனத்தை அழித்து இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாக ஆக்கவேண்டுமென சிங்கள ஆட்சி யாளர்களும் சிங்களப் புத்திஜீவிகளும் நினைத்தனர்.

அதுதவிர, நாட்டின் செல்வத்தைச் சூறை யாடி தங்களின் பொருளாதாரத்தை வள மாக்க ஆட்சியில் இருந்தவர்கள் முடிவு செய்த னர்.

இந்த நிலைமையே இன்றைய அவல நிலை ஏற்படுவதற்கு ஏதுவாயிற்று.

ஆக, அனைத்து தரப்புகளினதும் மனப் பாங்கில் மாற்றம் ஏற்படாத வரையில்; யார் ஆட்சியில் இருந்தாலும் எழுச்சி என்பது அடைய முடியாத இலக்காகவே இருக்கும்.

# வெள்ளநீர் பெருக்கத்தினால் தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

வெள்ளநீர் பெருக் கத்தை தொடர்ந்து தொற்று நோய்கள் பரவும் அபாயம் அதிகரித் துள்ளதாகப் பொதுச் சுகா தாரப் பரிசோதகர்கள் சங்கம் கவலை தெரிவி த்துள்ளது.

பொதுமக்கள் தங்கள் உடல்நலம் மற்றும் சுகாதாரம் குறித்து விழி ப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது.

வெள்ள நீருக்கு பாதிக்கப்படும் நபர்கள் குறிப்பாக வயிற்றுப் போக்கு, லெப்டோஸ்பி ரோசிஸ் மற்றும் புழுத் தொல்லை போன்ற நோய்களுக்கு ஆளாக நேரிடும்.

இந்தக் காலகட்டத் தில் சுத்தமான, புதிய மற்றும் சூடான உணவு களை மட்டுமே உட் கொள்வதையும், வேக வைத்த அல்லது போத் தல்களில் அடைக்கப் பட்ட தண்ணீரைப் பயன்படுத்துமாறும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நோய் களின் அறிகுறிகள் காணப்பட்டால் உடன டியாக மருத்துவ உத வியை நாடுமாறும் மேலும், வெள்ளநீரில் தோலில் காயங்கள் அல் லது கீறல்கள் உள்ள வர்களுக்கு லெப்டோஸ் பிரோசிஸ் ஏற்படும் என் றும் எச்சரித்தார். (ம-7)

### பாராளுமன்றத் தேர்தல்

## வாக்காளர் அட்டைகள் வழங்கப்படும் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான உத்தி யோக பூர்வமான வாக் காளர் அட்டைகள் வழங் கப்படும் திகதி தொட ர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுவதாவது, பொதுத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வமான வாக்காளர் அட்டைகள் ஒக்டோபர் 27,31 மற்றும் நவம்பர் 03 ஆகிய திகதிகளில் வழங்கப்படும்.

நவம்பர் 7 ஆம் திகதி க்குப் பின்னர் உத்தி யோக பூர்வமான வாக் காளர் அட்டைகள் கிடை க்கப் பெறாத வாக்கா ளர்கள் தங்களது பிர தேசங்களில் உள்ள தபால் அலுவலகங்க ளுக்குச் சென்று உத்தி யோக பூர்வமான வாக் காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடி யும் என இந்த அறிக் கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ம-7)

## மன்னார் நீதிபதிக்கு எதிராக சுவரொட்டி

### அச்சிட்டவர் விளக்கமறியலில்

(மன்னார்)

மன்னார் மேல் நீதி மன்ற நீதிபதிக்கு எதி ராகக் கொழும்பில் சுவ ரொட்டியை அச்சிட்டதாக கூறப்படும் யக்கல பிர தேச அச்சக உரிமை யாளரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு கொழும்பு பிர தான நீதவான் திலின கமகே நேற்று உத்தர விட்டுள்ளார்.

இந்தச் சுவரொட்டி குறி த்து தனக்கு தெரியாது எனவும், அது தனது ஊழியர்களால் அச்சி டப்பட்டது எனவும் தசுன் தரங்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இருப்பினும் அச்சக உரிமையாளரின் பிணைக் கோரிக்கையை நிராகரித்து அவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட் டார். (ம-7)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட் பாஸ் - மாதம்பிட்டிய மயானத்திற்கு அருகில் காரில் வந்த சிலர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் பயணித்த 35 வயது டைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு மாத் தறை - கேகனதுர பிர தேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்ப வத்தில் ஒருவர் உயிரி ழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## கேபிள் கார் திட்டத்தை தடுக்க முடியாது

### நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

(கொழும்பு)

அம்புலுவாவ பிர தேசத்தில் நிர்மாணிக் கப்படவுள்ள முதலாவது கேபிள் கார் திட்டத்தின் பணிகளுக்கு இடை யூறுகள் அல்லது தலை யீடுகள் ஏற்படாதவாறு கம்பளை பிரதேச செய லாளருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்று தனது திட்டத்திற்கு இடையூறு விளைவிக் கும் எனத் தெரிவித்து தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த மேன்முறை யீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளது. (ம-7)

## மாத்தறையில் பாடசாலை கட்டிடத்தில் தீப்பரவல்

திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் பாடசாலை ஒன்றின் இரண்டு மாடிக் கட்டிடம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மாத்தறை மாவட் டத்தின் அக்குரஸ்ஸ கல்வி வலயத்திற்குட் பட்ட தெலிஜ்ஜவில மத் திய மகா வித்தியாலய த்தின் இரண்டு மாடி கட்டிடமே இவ்வாறு தீக் கிரையாகியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் மைதானத்தில் விளையாடிக் கொண்டி ருந்த சிறுவர்கள் கட் டிடம் தீப்பற்றி எரிவதை கண்டு, சத்தமிட்டதைத் தொடர்ந்து பிரதேசவாசி கள் மற்றும் மாலிம்பட பொலிஸார் தீயை கட்டுப் படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபட்டனர். (ம-7)

## குடிநீர் அடைக்கப்படும் பிளாஸ்டிக் போத்தல்களை

### மீண்டும் பயன்படுத்துவதை நிறுத்துக

குடிநீர் அடைக்கப் படும் பிளாஸ்டிக் போத் தல்களை மீண்டும் பயன் படுத்துவதைத் தவிர்க் குமாறு சுகாதாரத்துறை மக்களை கேட்டுக் கொண் டுள்ளது.

பிளாஸ்டிக் போத்தல் களை மீளப் பயன்படுத் தும் போது, அவற்றின் உற்பத்தியில் பயன்படுத் தப்படும் மூலப்பொருட் களிலிருந்து சில இர சாயனங்கள் நீருடன் கலப்பதாக உணவுப்பாது காப்புப் பிரிவு தெரிவித் துள்ளது.

அவற்றில் சில இர சாயனங்கள் புற்று நோயை உண்டாக்கும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதனால் குடிநீர் நிர ம்பிய பிளாஸ்டிக் போத் தல்களை மீளப் பயன் படுத்துவதை தவிர்க் குமாறு மக்கள் அறிவுறுத் தப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

07

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1952ஆம் ஆண்டுத் தேர்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு சாதகமாக இருக்கவில்லை. பரந்துபட்ட தமிழ் பேசும் மக்களுக்கான சமஸ்டிக் கோட்பாடுகளுடனும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான கோரிக்கைகளுடனும் மக்களைச் சந்தித்த தமிழரசுக்கட்சி 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் கடுமையானதொரு தோல்விக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

தமிழரசுக் கட்சியினர் தாங்கள் முகம் கொடுத்த முதலாவது தேர்தலிலேயே படுதோல்வி கண்டமையானது அவர்களது கொள்கை கோட்பாடுகள் மாற்றம் காண வேண்டிய நிலைக்கு அல்லது வேறுவடிவம் எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை உணர்த்தியது.

அளவுக்கு மிஞ்சிய வகையிலும் தீவிரத் தன்மையுடனும் இன உணர்வுகளை கிளறிவிடக்கூடிய வெற்றுப்பேச்சுகளும் தேர்தல் அரசியலுக்கு அவசியமானவை என்கின்ற பாடங்களை 1952இன் தேர்தல் தோல்வியானது தமிழரசுக்கட்சியினருக்கு சொல்லிக் கொடுத்தது. இந்தப் பாடங்களோடு தான் 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி அடுத்த தேர்தலை நோக்கி பயணிக்கத் தொடங்கியது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

1952 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது பாராளுமன்றம் 1953இல் மிகப் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. இப் பொருளாதார நெருக்கடி காரணமாக அரிசி விலையை புதிய பட்ஜெட்டில் 25 சதத்திலிருந்து 70 சதமாக கூட்டுவதற்கான முடிவை அரசாங்கம் எடுத்திருந்தது.

பாராளுமன்றத்தில் பட்ஜெட் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே அரிசிவிலை 1953 ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி அதிகரித்தது. வேறு பல அரச மானியங்களையும் அரசு நிறுத்திக்கொண்டது. அரிசி விலை உயர்வுக்கு எதிராக ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அப்போது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை தவிர ஏனைய சகல தொழிற்சங்கங்களும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இடதுசாரி அமைப்புக்களின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தன. அனைத்துத் தொழிற் சங்கங்களும் இருவேறு சம்மேளனங்களாக அகில இலங்கை ரீதியில் ஒன்றிணைந்து பலம் பெற்றிருந்தன.

பொது வேலை நிறுத்தத்திற்கு நடைமுறை வடிவம் கொடுக்கும் வகையில் அந்த கட்சிகள் இணைந்து பட்ஜெட் தினமான 1953 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று ஒரு மாபெரும் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தப்பட்டது.

1953.08.12 ஆம் திகதி அதிகாலை ஹர்த்தால் தொடங்கியது. வேலைநிறுத்தங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கறுப்புக்கொடி உயர்த்தல், சத்தியாக்கிரகங்கள் என பல சம்பவங்கள் நாடெங்கிலும் நடந்தன. போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்தது. புகையிரத தண்டவாளங்களைக் கழற்றி போக்குவரத்தை நிறுத்தினர். கடைகள், நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மூடப்பட்டன. மக்கள் வீதிகளில் கூடினர்.

ஆளுநர் மாளிகை, அலரி மாளிகை, பாராளுமன்றம், பிரதான தபாலகம், தொலைத்தொடர்பு மத்திய நிலையம், லேக்ஹவுஸ் உள்ளிட்ட பல முக்கிய அரச இடங்கள் ஆத்திரமடைந்த பொதுமக்களால் சூழப்பட்டது.

அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாமல் திணறியது. அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட பாராளுமன்றக் கட்டடத்தில் நடத்தப் பயந்து துறைமுகத்துக்குள் நின்றிருந்த ஒரு பிரிட்டிஷ் கப்பலிலேயே நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கம் அன்றே மதியம் 12 மணிக்கு கலகச் சட்டத்தை பிறப்பித்தது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழரசுக் கட்சியும், ஹர்த்தாலில் நேரடியாகப் பங்குபற்ற பின்னடித்த போதும், ஹர்த்தாலுக்கான மக்களின் ஆதரவு மிகவும் உணர்வுபூர்வமாகவும் உச்சமாகவும் இருந்ததால் மக்களிடமிருந்து விலகி நிற்க விரும்பாத பண்டாரநாயக்க ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்தார். அதேபோல யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் இறுதிப் பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியும் கலந்து கொண்டது.

1953ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அரசாங்கத்திற்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் ஆயத்தப்படுத்தி பாராளுமன்றத்தினுள்ளும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்ததால் பிரதமர் டட்லிசேனாநாயக்க 1953 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி பதவி விலகினார். அதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான சேர். ஜோன் கொத்தலாவல அவர்கள் பிரதமராகப் பதவியேற்றார். இவர் சுதந்திர இலங்கையின் மூன்றாவது பிரதமராவார்.

சேர்.ஜோன்கொத்தலாவல மந்திரி சபையில் மாற்றங்களைச் செய்தார். சேர் ஜோன் கொத்தலாவல உடனடியாகவே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வரவுசெலவு திட்டத்தை ரத்து செய்ததுடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை நிதி அமைச்சர் பதவியிலிருந்து அகற்றி அவரிடம் விவசாயத்துறை அமைச்சை ஒப்படைத்தார். விவசாயத் துறை அமைச்சராக விருந்த சேர் ஒலிவர் குணதிலக்கவிற்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

இம் மாற்றத்தின் போது பிரதம மந்திரி சேர்.ஜோன்கொத்தலாவலயின் நிர்ப்பந்தத்தினால் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சர் பதவியிலிருந்து ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி இராஜினாமா செய்ய வேண்டியேற்பட்டது. அவ்வமைச்சு வீடமைப்பு மற்றும் சமூகசேவைகள் அமைச்சராகவிருந்த செனட்டர் சேர். கந்தையா வைத்தியநாதனுக்கு மேலதிக அமைச்சாக ஒப்படைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அரசிலிருந்து வெளியேறியது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அரசிலிருந்து வெளியேறியபோதும் அக்கட்சியின் மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. வீ. குமாரசாமி, திரு. அல்பிரட் தம்பையா ஆகியோர் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் சேர்ந்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதன்பின், ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்க்கை எழுச்சியைக் காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிக்கு அக் கட்சியில் ஏற்பட்ட பிளவே முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்ததன் மூலம் தமிழ் மக்களுக்கென தமிழர் பிரதேசங்களில் பல ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்க முடிந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் வெளிநாட்டு உறவுகள் மேம்பட்ட போதும் உள்நாட்டில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அவற்றுள் சில பிரச்சினைகளாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் கொள்கை தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்தமை. எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க அவர்களின் தேசிய உணர்வு மிக்க கொள்கையுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரபல்யமடைந்தமை. தேசிய கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் மக்கள் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் முடியாமற்போனமை. ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக் காலத்தைப் போன்று ஆங்கிலமே அரச கரும மொழியாகத் தொடர்ந்து நிலவியமை. தேசிய மொழிகளில் கல்வி பயின்றோருக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போனதுடன் அவர்களுக்குரிய மிகச் சொற்பமான தொழில்களின் சம்பளமும் மிகக்குறைவாயிருந்தமை. பௌத்த சமயத்திற்கும் பிக்குகளுக்கும் உரிய கௌரவம் வழங்கப்படவில்லை என்று மக்கள் கருதியமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

இக்காரணங்களால் சேர்.ஜோன் கொத்தலாவலவின் ஆட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தது. பிரச்சினையான சூழ்நிலையில் அரசாங்கத்தின் உரிய பதவிக் காலத்துக்கு முன்னரே பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் நிர்ப்பந்தம் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு ஏற்பட்டது.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எழுச்சி

சேர்.ஜோன் கொத்தலாவலயின் ஆட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்ததால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் மத்தியில் எழுச்சி பெறத்தொடங்கியது. எஸ். டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க "பஞ்ச மா பலவேகய" (ஐம்பெரும் சக்திகள்) என்ற பெயரில் பௌத்த பிக்குகள், தொழிலாளர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் ஆகியோரை ஒன்றிணைத்து தனது 1956ஆம் ஆண்டுத்தேர்தலின் வெற்றிக்கான பயணத்தை ஆரம்பித்தார்.

வளர்ச்சியடைந்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பௌத்தம் மற்றும் சிங்கள மொழிக்கு முக்கியம் கொடுத்து பெரும்பான்மையினரின் ஆதரவினை திரட்டியது. அப்பொழுது தனிச்சிங்கள மொழி இயக்கத்திற்கு ஆதரவு அதிகம் இருந்தமையினால் சுதந்திரக் கட்சி அதனை சாதகமாக பயன்படுத்தி ஆதரவு தேடிக்கொண்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இளைஞன்...

பட்டுள்ளது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஒரு வருடத்திற்கு முன்னர் அரபு நாடு ஒன்றில் இருந்து ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்ல முயற்சி மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், இரு நாட்களுக்கு முன் எட்டு பேர் கொண்ட இளைஞர் குழு ஐரோப்பா - ரஷ்ய எல்லையை கடக்க முயற்சி செய்த நிலையில் குறித்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

இது கொலையா? அல்லது இயற்கை மரணமா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (ம-7)

## யாழில்...

வில் சேதமடைந்திருப்பதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் முக்கியமான உட்கட்டமைப்புகள் 2 சேதமடைந்துள்ளன.

அவற்றில் ஒன்றின் மேல் மரம் சரிந்ததில் இவ்வாறு பகுதியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சங்கானை, நல்லூர் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்த பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## மன்னாரில்...

(வயது- 74) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி அவர் பேசாலை - தலைமன்னார் வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பதின் மூன்று...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வரம்பற்ற கடன்களை அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள போதிலும் நாட்டு மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிதியைப் பயன்படுத்தி எவ்வாறான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் குறித்த அறிக்கையினூடாக ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## வரி செலுத்தாத...

யாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் பாரிய வர்த்தகர்கள் பலரும் கோடிக்கணக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமலிருக்கின்றனர். விரைவில் அவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இவ்வாறு செலுத்தப்படாமல் இருக்கும் பாரிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விரைவில் அதனை செய்ய நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இந்த விவகாரத்தில் நபர்கள் தொடர்பான தராதரம் இன்றி நடவடிக்கை எடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அது முறையான வழிமுறைக்கமைய முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வற் வரியில் மோசடி செய்தமைக்காகப் பிரபல வர்த்தகர் அர்ஜுன் அலோசியஸுக்கு 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## விவசாயத்தை...

பெற்ற விவசாயம்,காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அந்த அமைச்சுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆய்வு செய்த ஜனாதிபதி, அத்திட்டங்கள் ஓரளவு வெற்றியடைந்தாலும் அதன்மூலம் கிராமப்புற வறுமை எந்த அளவிற்கு தீர்க்கப்பட்டுள்ளது என்ற கேள்வியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே எதிர்காலத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதே கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதான இலக்காக இருக்க வேண்டுமென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார். முழு நாட்டையும்உள்ளடக்கிய வகையில் கிராமப்புற வறுமையை ஒழிக்க புதிய விரிவான செயற்றிட்டத்தின் தேவையும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. வறுமை என்பது பணப் பற்றாக்குறை மாத்திரமன்றி, சமூகத்தில் ஒரு பிரிவினரை ஓரங்கட்டுவது மற்றும் ஒரு பாரிய சமூகப் பேரழிவு என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கான இலக்குமயப்பட்ட செயற்றிட்டத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் செயலாளர் எம்.பி. என்.எம்.விக்கிரமசிங்க, அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், திட்டப் பணிப்பாளர்கள் உட்பட அமைச்சின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-7)

## 13 மாவட்டங்...

அத்துடன், 344 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட 2,222 குடும்பங்களைச் சேர்ந்த 9,591 பேர் 70 தற்காலிக முகாம்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## வட மாகாணத்...

பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்கும் வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 5627
R 8 9 8 5 6 6
அத சம்பத R 8 5 6 6
சீட்டிழுப்பு இலக்கம் 202
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1657
N 14 23 64 74 N
Double Chance 101360

மெகா பவர்
திகதி 16/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1975
W 02 08 18 20 35
Double Chance 035048

லக்கி 7 VIP
திகதி 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 0453
Q 3 1 1 8 5 5 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3869
சீட்டிழுப்பு திகதி 16.10.2024
O 13 17 25 59
O 131816
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 936
மேஷம் 22 34 43 52 மேஷம்
102169 43

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.10.2024 வெற்றி வாரம் 335 வர்ணம் பச்சை
K 4 5 2 6 7 6
32853
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,875,760.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2601 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 16.10.2024 தினம் புதன்கிழமை
21 32 66 73 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,354,784.80
DLB

சனிதா
திகதி 2024.10.16 வெற்றி வாரம் 4762
09 12 66 71 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,235,233.60
76897
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4313 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.10.16 தினம் புதன்கிழமை
15 27 44 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,921,710.80
140748
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 20 02 15 47 69
1777
16.10.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 550,766,335.80
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.10.16 வெற்றி வாரம் 2069 வர்ணம் மஞ்சள்
10 14 23 28 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,852,303.60
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை வெற்றி வாரம் : 2427
சீட்டிழுப்பு திகதி : 2024.10.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,886,296.80
13 25 29 55 M
140373
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை

## இந்தியன் செலக்‌ஷனின்

பிரமாண்டமான

## தீபாவளி

SPECIAL OFFER!

ஜவுளிக் கொண்டாட்டம்



சாறி OFFER விசேட விலைக் கழிவு

~~1500/=~~ → 1000/=
~~3000/=~~ → 2000/=
~~3500/=~~ → 2500/=
~~4000/=~~ → 2800/=
~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்

இம்முறையும் தீபாவளியை இந்தியன் செலக்‌ஷனுடன் கொண்டாடுங்கள்

காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)

(435)

### யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(436)

### நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் சில நாட்களே உள்ளன

அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 TRAVELS இல் அமெரிக்கா ... பதிவு செய்தோம்.

திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0768226243 | யாழ்ப்பாணம் 0777068777 | யாழ்ப்பாணம் 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | கோப்பாய் 0764550674 | 0764550670 | 0777718322 |
| புத்தூர் 0764550671 | நெல்லியடி 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

### விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759

(402)

### தேவை

இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதியில் அமைந்துள்ள பிரபல Textile கடைக்கு பணிப் பெண்கள் தேவை.

075 776 6175
077 958 6666
021 703 0501

(2329)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். அவர்களுக்குரிய செலவுகள் நாமே பொறுப்பு எடுத்துக்கொள்வோம்.

074 179 3394

(2331)

### காணி தேவை

பூநகரி, கிளிநொச்சி, மன்னித்தலை, கௌதாரிமுனை பகுதிகளில் (நிலப்பரப்பு) உறுதிக் காணி தேவை.

தொடர்புகளுக்கு :
077 374 4652

(434)

### Show Money

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

074 173 7684

(434)

### வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

### EDUCATION Yaalpaanam 6

எடியூகேஷன் யாழ்ப்பாணம்

19th & 20th OCTOBER
09 AM - 04 PM

Jaffna Public Library
யாழ்ப்பாணம் பொது நூலகம்

Some of Our Success Stories






■ Student Visa ■ Work Visa ■ Skill Migration

- புலமைப் பரிசில்கள் ( Scholarship )
- IELTS தள்ளுபடிகள்
- மலிவான கல்வி கட்டணம்
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

கலந்தாய்வு இலவசம்
(No consultant fees)

Call us
ICFS
INTERNATIONAL CENTER FOR FOREIGN STUDIES
077 740 6793 | 0112 827 320
151D, High Level Road, Nugegoda www.icfs.lk

(2326)




விஜய் ராகங்கள்

மேக்னா | விக்னேஷ் | ஸ்ரீநிதி | இந்திரஜித்

ஒக்டோபர் 20 2024

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கு
(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகாமையில்)

பிற்பகல் 3 மணிக்கு

Event Management By - Ceylon Art Creation (CAC) - 075 948 8262

SPONSORS: Hari Air Travel, IDMNC INTERNATIONAL, கிருபா லேஸர்ஸ், Ruby Jewellery, SR

official sponsors: Ceylon Art Creation, தினக்குரல், IBC தமிழ், saravana ADVERTISING

VVIP 3000 | VIP 2000 | SILVER 1000

அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள

| HARI AIR TRAVEL | IDMNC INTERNATIONAL | RUBY JEWELLERY |
|---|---|---|
| 681.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 [illegible]294 | 839.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 9901 | 227.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 6919 |

(C-1408)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org